# பொது (மறுவாழ்வு)த் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

2023 - 2024

## மானியக் கோரிக்கை எண். 38


# செஞ்சி கே.எஸ். மஸ்தான்

சிறுபான்மையினர் நலன் மற்றும்

வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்



©

தமிழ்நாடு அரசு

2023

<u>பொருளடக்கம்</u>


| வ. எண். | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–3 |
| 2. | அயலகத் தமிழர்கள் நலன் | 3–14 |
| 3. | முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன் | 14–32 |
| 4. | முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள் நலன் | 32–33 |
| 5. | பொருளாதார நெருக்கடியால் தமிழ்நாட்டிற்கு வரும் இலங்கைத் தமிழர்கள் | 33–34 |
| 6. | தாயகம் திரும்பியோர் | 34–39 |
| 7. | அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் | 40–44 |
| 8. | முடிவுரை | 44–46 |

# பொது (மறுவாழ்வு)த் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு 2023-2024

## 1. முன்னுரை

இலங்கைத் தமிழரின் நலன், அயலகத் தமிழர் நலன் மற்றும் தாயகம் திரும்பியோரின் மறுவாழ்வினை பேணிப் பாதுகாத்திடுவது தொடர்பான பணிகளும், திட்டங்களும் தலைமைச் செயலகத்தின் பொது மற்றும் மறுவாழ்வுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மறுவாழ்வு ஆணையரகம் 1969-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதன்மூலம் பர்மா, வியட்நாம், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய இந்திய வம்சாவழியினருக்கான நலத்திட்டம் மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இலங்கையில் மூண்ட உள்நாட்டுப் போர், இனக்கலவரம் காரணமாக பல்வேறு காலகட்டங்களில்

3,04,269 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக 1983–இல் தமிழ்நாட்டிற்கு வந்தனர். அந்த சமயத்தில், இலங்கைத் தமிழர்களுக்கான நிவாரணப் பணிகளும் இத்துறையின் வசம் ஒப்படைக்கப்பட்டன.

பன்னெடுங்காலந்தொட்டு தமிழர்கள் கல்வி, வணிகம் மற்றும் வாழ்வாதாரத்திற்கான வேலைவாய்ப்பினைத் தேடி உலகின் பல்வேறு நாடுகளுக்கும் புலம் பெயர்ந்து வருகின்றனர். இவ்வாறு, புலம்பெயர்ந்த அயலகத் தமிழர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாத்திட 2010–ஆம் ஆண்டு மறுவாழ்வுத் துறை இயக்குநரகத்தை வலுப்படுத்த "அகதிகள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகம்" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மேலும், 2021–ஆம் ஆண்டு இவ்வாணையரகம் "அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம்" என பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

தற்போது, அரசின் தொலைநோக்கு திட்டத்தின்படி, வெளிநாடுகளில் பாதிக்கப்படும் அயலக தமிழர்களை கண்டறிந்து, அவர்களுக்கு போதுமான உதவிகளை செய்திடல், வெளிநாடுகளில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு தேவையான உதவிகள் மற்றும் வாழ்வாதாரத்தினை பேணிக் காத்தல் தொடர்பான பொருண்மை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

## 2. அயலகத் தமிழர்கள் நலன்

புலம் பெயர்ந்தோரது பாதுகாப்பிற்கு போதுமான உதவிகளைச் செய்வதில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் முக்கிய பங்கு வகிக்கின்றது. வெளிநாடுகளுக்கு சென்றவர்களிடமிருந்தோ அல்லது அவர்களது குடும்பங்களிலிருந்தோ இன்னல்படுவது தொடர்பாக

தொலைபேசி அழைப்பு வரும் நேரங்களில் வெளிநாடுகளில் துன்புறும் நேர்வுகளில் அவர்களை மீட்டு தாயகம் அழைத்து வரவும், வேலை செய்யும் இடங்களில் வரவேண்டிய தீர்வுகளைப் பெற்று வழங்கிடவும், வெளிநாடுகளில் இறந்தவர்களின் பூத உடல்களை ஒன்றிய அரசு மற்றும் சம்பந்தப்பட்ட நாட்டில் உள்ள இந்திய தூதரகத்தின் உதவியுடன் சொந்த ஊர்களுக்கு கொண்டு வரவும் இத்துறை உதவி செய்து வருகிறது.

மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர் "மாவட்ட நல அலுவலர் (அயலகத் தமிழர்கள்)" ஆக நியமிக்கப்பட்டுள்ளதுடன், தலைமை மேலாளர் (குற்றவியல்) அவர்களின் பொறுப்பின் கீழ் உள்ள பிரிவானது "மாவட்ட நல மையம் (அயலகத் தமிழர்கள்)" ஆகவும் செயல்பட்டு, மேற்படி பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அயலகத் தமிழர்களுக்காக அயலகத் தமிழர் நல வாரியம்

அமைக்கப்பட்டது உள்ளிட்ட பல்வேறு நலத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 2.1. அயலகத் தமிழர் நல வாரியம் அமைத்தல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.10.2021 அன்று வெளியிட்ட அறிவிப்பில், புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும், இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் வாழும் தமிழர் நலன் காக்க "அயலகத் தமிழர் நல வாரியம்" அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

மேலும், 2011–ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வெளிநாடு வாழ் தமிழர் நலச் சட்டம், உட்பிரிவு 10 (1) – அயலகத் தமிழர் நலன்களுக்காக வாரியம் உருவாக்கிட வழிவகை செய்கிறது.

இதன் அடிப்படையில், அரசாணையின்வழி தலைவர் உள்ளடக்கிய 15 உறுப்பினர்கள் கொண்ட "அயலகத் தமிழர் நல வாரியம்" அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாரியத்தின் முதல் கூட்டம் 28.02.2023 அன்று நடைபெற்றது. இவ்வாரியத்தின் மூலம் கீழ்காணும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்:

- அயலகத்தமிழர் குறித்த தரவு தளம் ஏற்படுத்துதல்; வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு காப்பீடு திட்டம் மற்றும் அடையாள அட்டை வழங்குதல்.
- வெளிநாட்டிற்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின் போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை வழங்குதல்.
- சென்னை மட்டுமின்றி இராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர், சிவகங்கை, விழுப்புரம் ஆகிய 7 மாவட்டங்களில் முன்பயண புத்தாக்கப் பயிற்சி மையம் அமைத்தல்.

- அயலகத் தமிழர்களுக்கு ஆலோசனை வழங்க கட்டணமில்லா தொலைபேசி வசதி, வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி வசதிகள் ஏற்படுத்துதல்.
- அயலகத் தமிழர்களுக்கான சட்ட உதவி மையம் அமைத்தல்.

## 2.2. அயலகத் தமிழர்களுக்கான இதர நலத் திட்டங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, அயலகத் தமிழர்களுக்கு கீழ்காணும் உதவிகளுக்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன:

- கொரோனா பெருந்தொற்று காரணமாக சுமார் 7 இலட்சம் தமிழர்கள் தாயகம் திரும்பி உள்ளனர். இவர்களில் பலர் வேலை இழந்தும் திரும்பி உள்ளனர். இவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில் "புலம்பெயர்ந்தோர் வேலைவாய்ப்பு திட்டத்தின்" கீழ் சிறு மற்றும்

குறு தொழில்கள் செய்திட அதிகபட்சமாக 2.5 இலட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்து தரப்படுகிறது.

- அயலகத் தமிழர்கள் தமிழ்நாட்டில் பாதுகாப்பான முதலீடு செய்ய வழிவகை செய்தல்.
- **"எனது கிராமம்"** திட்டத்தின் கீழ், புலம் பெயர்ந்த தமிழர்கள் தங்களது சொந்த ஊரில் கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்திட வழிவகை செய்தல்.

## 2.3. பண்பாடு மற்றும் அறிவுசார் நிகழ்வுகளை ஊக்குவிப்பதில் அயலகத் தமிழர்களின் பங்களிப்பினை அங்கீகரித்தல்

### அ) அயலகத் தமிழர் தினம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு, ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 12–ஆம் நாள் அயலகத் தமிழர் தினமாக

கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்வானது பல்வேறு நாடுகளில் வசிக்கும் தமிழர்களின் பங்களிப்புடன் அவர்களை ஒருங்கிணைக்கும் விதமாகவும், ஊக்குவிக்கும் விதமாகவும் அமையும். மேலும், நமது நாட்டின் பாரம்பரியம், கலை, இலக்கியம் மற்றும் பண்பாட்டினை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வதே இந்நிகழ்வின் நோக்கமாகும்.

2022–ஆம் ஆண்டில் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக இந்நாள் "தமிழால் இணைவோம்" என்ற கருப்பொருளில் இணையவழி மூலமாக கொண்டாடப்பட்டது.

அயலகத் தமிழர் தினம் 2023, **"உலகெங்கும் தமிழ்"** என்ற கருப்பொருளில் 11.01.2023, 12.01.2023 ஆகிய நாட்களில் சென்னை கலைவாணர் அரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு மலேசிய நாட்டு அமைச்சர் திரு சிவகுமார் வரதராஜ்; மாண்புமிகு இலங்கை நாட்டு அமைச்சர் திரு அரவிந்த்குமார்; மாண்புமிகு பப்புவா

நியு கினியா நாட்டு ஆளுநர் திரு சசீந்திரன் முத்துவேல்; கயானா நாட்டு முன்னாள் பிரதமர் டாக்டர் மோசஸ் வீராசாமி நாகமுத்து; மொரிஷியஸ் நாட்டு இடைக்கால அதிபர் டாக்டர் பரமசிவம்பிள்ளை வையாபுரி; இலங்கை நாட்டு முன்னாள் முதலமைச்சர் திரு செந்தில் தொண்டைமான்; மலேசிய நாட்டு முன்னாள் அமைச்சர் திரு சரவணன்; இலங்கை நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு சுமந்திரன், திரு மனோ கணேசன்; மேற்கு ஆஸ்திரேலியா, ரிவர்டன் சட்டமன்ற உறுப்பினர் திரு ஜெகதீஷ் கிருஷ்ணன் மற்றும் உலகம் முழுவதிலுமிருந்து முக்கியமான தமிழ் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். மேலும், பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் சங்க நிர்வாகிகள் பங்கேற்று, வெவ்வேறு தலைப்புகளில் கருத்துகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இவைதவிர, கலை பண்பாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன.

### ஆ) அயலகத் தமிழர்களுக்கு தமிழ் பயிற்றுவித்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, வெளிநாட்டில் வசிக்கும் தமிழர்களின் வாரிசுகளுக்கு தமிழ் பயிற்றுவிப்பதற்கான புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ஆசிரியர்களுக்கு பயிற்சி மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு 2022–2023–ஆம் நிதி ஆண்டிற்கு ரூபாய் 12 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மெய்நிகர் கலைக்கூடம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 2.4 சுழல் நிதி

சுழல் நிதியாக ரூபாய் 1 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு, அதிலிருந்து கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இத்தொகையானது ஒவ்வொரு ஆண்டும் மீளப்பெறப்பட்டு வருகிறது:

- 2022–2023–ஆம் ஆண்டில் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 145 தமிழர்கள் இந்திய தூதரகங்கள் வாயிலாக மீட்டு தாயகம் அழைத்து வரப்பட்டனர்.
- வெளிநாடுகளில் நோய்வாய்ப்பட்டவர்களுக்கான மருத்துவ செலவினங்களை மேற்கொள்ளுதல்.
- 2022–2023–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இருந்து பல்வேறு நாடுகளுக்கு சென்று உயிரிழந்த 158 தமிழர்களின் பூத உடல்கள் இந்தியா கொண்டு வரப்பட்டு, மாநில அரசின் இலவச அமரர் ஊர்தி சேவை எண் (155377) மூலம் அவர்களது சொந்த ஊர்களுக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கண்ட காரணங்களுக்காக, 2022–2023–ஆம் நிதியாண்டில் சுழல் நிதியிலிருந்து ரூபாய் 57.04 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 2.5. கம்போடியா, தாய்லாந்து – மியான்மர் எல்லையிலிருந்து தமிழர்களை மீட்டெடுத்தல்

தமிழ்நாட்டைச் சேர்ந்த நபர்கள் உட்பட பல இந்தியர்கள், தகவல் தொழில் நுட்ப வேலைகளில் பணியமர்த்துவதாகக் கூறி கம்போடியா, தாய்லாந்து – மியான்மர் எல்லைப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு சட்டவிரோத இணையதள வேலைகளைச் செய்ய கட்டாயப்படுத்தப்படுவதாகவும், அவ்வேலைகளைச் செய்ய மறுத்தால், கடுமையாக தாக்கப்படுவதாகவும் தகவல்கள் தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு வரப்பெற்றதைத் தொடர்ந்து, சம்பந்தப்பட்ட நாடுகளிலுள்ள இந்திய தூதரகங்களுடன் இணைந்து மேற்கொண்ட தொடர் நடவடிக்கையின் விளைவாக, 31.03.2023 வரை 73 தமிழர்கள் கம்போடியா, தாய்லாந்து – மியான்மர் எல்லையிலிருந்து மீட்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் செலவில் விமான

பயணச்சீட்டுகள் ஏற்பாடு செய்யப்பட்டு தமிழ்நாட்டிற்கு பத்திரமாக அழைத்து வரப்பட்டுள்ளனர்.

### 2.6. உத்தரகாண்ட் மாநிலத்தில் ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த தமிழர்களின் உடல்களை மீட்டெடுத்தல்

உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள கேதார்நாத் கோவிலுக்குப் புனித யாத்திரை சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மூவர் 18.10.2022 அன்று நடந்த ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்தனர். அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தின் மூலம் அரசு செலவில் இறந்தவர்களின் பூத உடல்கள் 20.10.2022 அன்று விமானங்கள் மூலம் சென்னை கொண்டு வரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

## 3. முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன்

மாநிலத்தில் உள்ள 29 மாவட்டங்களில் 106 முகாம்களில் (திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம்

மாவட்டங்களில் உள்ள இரண்டு சிறப்பு முகாம்கள் உட்பட) 31.03.2023 அன்றுள்ள நிலவரப்படி 19,408 குடும்பங்களைச் சேர்ந்த 58,457 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஒன்றிய அரசு, மாநில அரசின் வழிகாட்டுதல்களுடன் நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளின்படி, இருப்பிடம், குடிநீர், மின்சாரம் என பல்வேறு நிவாரண உதவிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு வழி செய்யும் விதமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.08.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி, "இலங்கை அகதிகள் முகாம்" என்பதை "இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்" எனப் பெயர் மாற்றம் செய்து ஆணை வெளியிடப்பட்டதுடன், பின்வரும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 3.1. வீடுகள் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல்

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு 7,469 புதிய வீடுகள் கட்டப்படும் என சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன்படி, முதற்கட்டமாக, 3,510 புதிய வீடுகள் கட்டுவதற்கு ஏதுவாக, அதாவது நான்கு வீடுகள் (868x4= 3,472) கொண்ட 868 தொகுப்பு வீடுகள் கட்டிட ரூபாய் 173.60 கோடியும், 38 தனிவீடுகள் கட்டிட ரூபாய் 2.14 கோடியும், அடித்தளம், சரக்கு மற்றும் சேவை வரி உயர்வு, மேற்பார்வைப் பணிகள், ஆவணப்படுத்துதல் மற்றும் வரைபடம் தயாரித்தல் ஆகிய பணிகளுக்காக ரூபாய் 11.5 கோடியும் ஆக மொத்தம் ரூபாய் 187.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்து வீடுகள் கட்டும் பணிகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் தொடர்புடைய மாவட்ட

ஊரக வளர்ச்சி முகமை மூலமாக முன்னேற்றத்துடன் நடைபெற்று வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், அடியனூத்து, தோட்டனூத்து மற்றும் கோபால்பட்டி ஆகிய மூன்று மறுவாழ்வு முகாம்களை ஒருங்கிணைத்து தோட்டனூத்து கிராமத்தில் புதிதாக 321 வீடுகள் கட்ட ரூபாய் 17.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வீடுகள் கட்டப்பட்டு **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 14.09.2022 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது**. இரண்டாம் கட்டமாக 3,959 வீடுகள் கட்டுவதற்கு மொத்த மதிப்பீடான ரூபாய் 223 கோடியில், 2023–2024–ஆம் நிதியாண்டில் முதல் தவணையாக ரூபாய் 150 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முகாம்களில் குடிநீர், கழிவறை, மின்சாரம் மற்றும் கழிவுநீர்க்கால்வாய் வசதிகள் கூடுதலாக செய்து கொடுக்க ஏதுவாக ரூபாய் 30 கோடிக்கு நிர்வாக

ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில், முதற்கட்டமாக 2022-2023-ஆம் நிதியாண்டில் ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் சீரிய முறையில் நடைபெற்று வருகின்றன.

## 3.2. இலங்கைத் தமிழர் வாழ்வாதார மேம்பாட்டு நிதி

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் பழுதுபார்ப்பு, பராமரிப்பு மற்றும் இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்திட 2021-2022-ஆம் நிதியாண்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 27.08.2021 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண்.110-ன்கீழ் வெளியிட்ட அறிவிப்பின் அடிப்படையில், ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 29 மாவட்டங்களில் உள்ள மறுவாழ்வு முகாம்களில் பின்வருமாறு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன:

| வ.எண். | பணி விபரம் | தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | குடிநீர் மேம்பாட்டு பணிகள் | 74,51,250 |
| 2. | சுகாதார வசதிகள் | 1,95,94,800 |
| 3. | மின்சார வசதிகள் | 1,92,63,950 |
| 4. | சாலைகள் பழுதுபார்த்தல் | 36,90,000 |
| | **மொத்தம்** | **5,00,00,000** |

## 3.3. மகளிர் சுய உதவிக் குழுக்கள்

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் செயல்படும் 321 சுய உதவிக் குழுக்களுக்கு முகாம்வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த "சமூக முதலீட்டு நிதியாக" தலா ரூபாய் 50,000 வீதம் 2020–ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. தற்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழான அறிவிப்பின்படி, ரூபாய் 75,000 வீதம் ஒவ்வொரு

சுய உதவிக் குழுவிற்கும் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ரூபாய் 2.40 கோடி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, புதிதாக உருவாக்கப்பட்ட 300 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, சமுதாய முதலீட்டு நிதியாக ரூபாய் 1.25 இலட்சம் வழங்கப்பட்டு வருகின்றது. இப்பணிக்காக இதுவரை ரூபாய் 3.25 கோடி மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## 3.4. திறன் மேம்பாட்டுப் பயிற்சி

வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி 5,000 முகாம்வாழ் இளைஞர்களுக்கு அளிக்கப்படும் என்று சட்டமன்றப் பேரவை விதி எண். 110–இன் கீழ் 27.08.2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரத்தை

மேம்படுத்திடவும், அவர்கள் தங்களது வேலைவாய்ப்புத் தகுதியினை உயர்த்திக் கொள்ளவும் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, ஆணை வெளியிடப்பட்டு முகாம்வாழ் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க திறன் மேம்பாட்டுத் துறையின் மூலம் மாவட்டந்தோறும் முகாம்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு 3,289 நபர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஏனையோருக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

## 3.5. துணிமணிகள்

ஆடைகள் மற்றும் போர்வைகளை ஒன்றிய அரசு நிர்ணயித்த விலையின் அடிப்படையில் தற்போது கொள்முதல் செய்து வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண். 110–இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், உயர்த்தப்பட்ட விலையில் இலவச

ஆடைகள் 2021–2022–ஆம் நிதியாண்டில் கோ–ஆப்டெக்ஸ் மூலமாகவும், 2022–2023–ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு துணிநூல் கழகம் மூலமாகவும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை இலவசப் போர்வைகளும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு கோ–ஆப்டெக்ஸ் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

## 3.6. பாத்திரங்கள்

ரூபாய் 250 மதிப்பிலான, 8 வகையான சமையல் பாத்திரங்கள் ஒவ்வொரு முகாம்வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்திற்கும் இலவசமாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்பட்டு வருகிறது. தற்போது, ரூபாய் 250 மதிப்பில் பாத்திரங்கள் வாங்கி வழங்க இயலாத நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டவாறு, 2021–2022–ஆம் நிதியாண்டில் 8 வகையான

எவர்சில்வர் பாத்திரங்கள் ரூபாய் 1,285 மதிப்பில் சேலம் இந்திய உருக்காலை நிறுவனத்திடமிருந்து (SAIL) கொள்முதல் செய்யப்பட்டு முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## 3.7. விலையில்லாச் சமையல் எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்பு, மானிய விலையில் எரிவாயு உருளை வழங்குதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 27.08.2021 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன்கீழ் வெளியிட்ட அறிவிப்பில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது; பிரதம மந்திரி உஜ்வாலா திட்டத்தின்கீழ் இவர்களுக்கு எரிவாயு இணைப்புப் பெற இயலாத நிலை உள்ளது. எனவே, ரூபாய் 7 கோடி செலவில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா எரிவாயு இணைப்பு மற்றும் இலவச அடுப்பு வழங்கப்படும் என்றும், ஒரு குடும்பத்திற்கு வருடம்

ஒன்றிற்கு அதிகபட்சம் 5 எரிவாயு உருளைக்குத் தலா ரூபாய் 400 வீதம் மானியத் தொகை வழங்கப்படும் என்றும் அறிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, 6,582 குடும்பங்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புகள் மற்றும் அடுப்பு வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2022–2023–ஆம் நிதியாண்டில் ரூபாய் 3.36 கோடி செலவில் 5 எரிவாயு உருளைக்குத் தலா ரூபாய் 400 மானியத் தொகை வீதம் 16,801 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 3.8. பணக்கொடை

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர பணக்கொடை மாநில அரசால் உயர்த்தி வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண்.110–இன் கீழ் 27.08.2021 அன்று அறிவித்தார். அவ்வறிவிப்பின்படி கீழ்காணும் உயர்த்தப்பட்ட

வீதத்தில் மாதாந்திர பணக்கொடை வழங்க ஆணை வெளியிடப்பட்டது. இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக ரூபாய் 21.29 கோடி செலவாகும்:

| வ. எண். | பிரிவு | பழைய தொகை ரூ. | 01.09.2021 முதல் புதிதாக உயர்த்தப்பட்ட தொகை ரூ. |
|---|---|---|---|
| 1, | குடும்பத் தலைவர் | 1,000/- | 1,500/- |
| 2. | ஒவ்வொரு கூடுதல் உறுப்பினர் (12 வயது அதற்கு மேல்) | 750/- | 1,000/- |
| 3. | சிறியவர்கள் (12 வயதிற்கு உட்பட்டவர்கள்) | 400/- | 500/- |

## 3.9. அரிசி மானியம்

முகாம்களில் வசிக்கும் ஒவ்வொரு இலங்கைத் தமிழர் குடும்பங்களில் பெரியவர்களுக்கும், 8 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் ஒவ்வொரு

மாதமும், ஒருவருக்கு முறையே 12 கிலோ மற்றும் 6 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. இதில், ஒவ்வொரு குடும்பத்திற்கும், முதல் 20 கிலோ அரிசி இலவசமாகவும், கூடுதல் அரிசி ஒரு கிலோ ரூ.0.57 என்ற விலையிலும் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி எண் 110–ன் கீழ் 27.08.2021 அன்று முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கான மொத்த அரிசியும் இலவசமாக வழங்கப்படும் எனவும், இதற்கான கூடுதல் செலவினம் ரூ.19 இலட்சத்தினை மாநில அரசே ஏற்கும் எனவும் அறிவித்து, அதன்படி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, எண்ணெய், சர்க்கரை என அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் இலங்கைத் தமிழர்களுக்கு சலுகை விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.10. கல்வி உதவித் தொகை

12–ஆம் வகுப்பு வரை படிக்கும் 11,973 மாணவ–மாணவியர் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் உள்ளனர். இவர்களுக்கு, இலவசக் கல்வித் திட்டம் 12–ஆம் வகுப்பு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படுவது போல் இலவச சீருடைகள், மதிய உணவு, புத்தகங்கள் மற்றும் இலவச பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றில் உயர்கல்விக்காக இலங்கைத் தமிழ் மாணவர்கள் பொதுப்பிரிவுக்கான கலந்தாய்வு மூலம் ஒற்றைச் சாளர முறையில் தகுதியின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் 27.08.2021 அன்று அறிவித்தவாறு உயர்த்தப்பட்ட வீதத்தில் கல்வி

உதவித் தொகை பின்வருமாறு வழங்கப்பட்டு வருகிறது:

| வ. எண். | படிப்பு | கல்வித் தொகை ரூ. | உயர்த்தப்பட்ட கல்வித் தொகை (2021-2022 முதல்) ரூ. |
|---|---|---|---|
| 1. | பட்டயப்படிப்பு | 2,500/- | 10,000/- |
| 2. | இளநிலை கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்பு | 3,000/- | 12,000/- |
| 3. | இளநிலை தொழிற்கல்வி பட்டப்படிப்பு | 5,000/- | 20,000/- |
| 4. | இளநிலை பொறியியல் படிப்பு | 5,000/- | முழுச் செலவினம் |
| 5. | முதுநிலை பட்டப்படிப்பு | 6,000/- | முழுச் செலவினம் |

மேலும், பொறியியல் படிப்புகளில் சேரும், மதிப்பெண் அடிப்படையில் முதல் 50 மாணவர்களுக்கான முழு கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்ளும் என்றும், அதுமட்டுமின்றி, வேளாண்மை /

வேளாண்மைப் பொறியியல் படிக்கும் மதிப்பெண் அடிப்படையில் முதல் 5 மாணவர்களுக்கு முழு கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக்கொள்ளும் என்றும், இவை தவிர, மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக முதுகலை பட்டப்படிப்பில் சேரும் அனைத்து முகாம்வாழ் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கும் கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி உயர்த்தப்பட்ட விகிதத்தில் கல்வி உதவித் தொகை வழங்கும் பொருட்டு ரூபாய் 2.71 கோடி நிதி தமிழக அரசிடமிருந்து விடுவிக்கப்பட்டு, தற்போது 2021–2022–ஆம் ஆண்டில் 1,504 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். 2022–2023–ஆம் ஆண்டிற்கு முதற்கட்டமாக 1,778 மாணவர்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 3.11. நீண்ட நாள் தீர்வுகளுக்கான ஆலோசனை குழு

முகாமிற்கு உள்ளேயும் வெளியேயும் இலங்கைத் தமிழர்கள் எதிர்கொள்ளும் நீண்டகால சவால்களுக்கு தீர்வுகாண ஏதுவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண்.110–இன் கீழ் 27.08.2021 அன்றைய அறிவிப்பின்படி, ஆலோசனைக் குழு அமைக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இக்குழு குடியுரிமை பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கும், இலங்கைத் தமிழர்கள் சொந்த விருப்பத்தின் பேரில் இலங்கைக்குத் திரும்புவதற்கு உதவுவதற்கும், தமிழ்நாடு அரசாங்கத்திற்கான செயல்திட்டத்தை உருவாக்குவதற்கான முன்மொழிவினை தயார் செய்து வருகிறது. முதல் ஆலோசனைக் குழுக்கூட்டம் 29.12.2021 அன்று நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 11.07.2022, 12.07.2022, 7.10.2022 மற்றும் 11.11.2022 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. சட்ட

ஆலோசனைக் கூட்டங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## 3.12. விசா கட்டணம் மற்றும் மிகைத் தங்கலுக்கான அபராதத் தொகை தள்ளுபடி செய்தல்

தமிழ்நாடு அரசின் முன்மொழிவுகளின் அடிப்படையில் ஒன்றிய அரசு சுயவிருப்பத்தின் பேரில் இலங்கைக்கு திரும்பிச் செல்பவர்களுக்கு விசா கட்டணம் மற்றும் மிகைத் தங்கலுக்கான அபராதத் தொகையினை இனம் வாரியாக தள்ளுபடி செய்து வருகிறது. 31.03.2023 அன்றுள்ளவாறு, 920 குடும்பங்களைச் சார்ந்த 1,748 இலங்கைத் தமிழர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்து தாய்நாடு திரும்பியுள்ளனர்.

## 3.13. சிறப்பு முகாம்

தற்சமயம் தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தலா ஒரு சிறப்பு முகாம்

உள்ளது. இந்த முகாம்களில், குற்றப் பின்னணி உள்ள / விசாரணையில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் அல்லது பிணையில் வந்துள்ளவர்களுக்குத் தங்குமிடம் வழங்கப்பட்டுள்ளது. 31.03.2023 அன்றைய நிலவரப்படி, இந்த சிறப்பு முகாமில் 81 இலங்கைத் தமிழர்கள் வெளிநாட்டினர் சட்டம், 1946–இன் பிரிவு 3(2)(e)–இன் கீழ் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சிறப்பு முகாம்களில் அவர்களின் நடமாட்டம் முகாமிற்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், அவர்களுக்கு உணவுக்காக ஒரு நாளைக்கு ரூபாய் 175 வழங்கப்படுகிறது.

## 4. முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள் நலன்

31.03.2023 அன்றைய நிலவரப்படி, 13,320 குடும்பங்களைச் சேர்ந்த 33,375 இலங்கைத் தமிழர்கள், தமிழ்நாட்டில் உள்ளூர் காவல் நிலையங்களில் பதிவு செய்துகொண்டு முகாமிற்கு வெளியே வாழ அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு,

முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

## 5. பொருளாதார நெருக்கடியால் தமிழ்நாட்டிற்கு வரும் இலங்கைத் தமிழர்கள்

### 5.1. பொருளாதார நெருக்கடியால் தமிழ்நாட்டிற்கு வரும் இலங்கைத் தமிழர்களுக்கான நிவாரணம்

இலங்கையில் ஏற்பட்டுள்ள அசாதாரண பொருளாதார சூழ்நிலையால் 31.03.2023 அன்றைய நிலவரப்படி, 236 இலங்கைத் தமிழர்கள் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மனிதநேய அடிப்படையில் தினசரி உணவு, இதர அத்தியாவசிய பொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதற்கான செலவினமாக, ரூபாய் 49.95 இலட்சம் மாநில அரசு விடுவித்துள்ளது.

## 5.2. இலங்கைக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குதல்

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் உணவு பொருட்கள் தட்டுப்பாட்டில் இன்னலுறும் மக்களுக்கு 40,000 டன் அரிசி, ரூபாய் 15 கோடி மதிப்பிலான 500 டன் ஆவின் பால்பவுடர் மற்றும் ரூபாய் 27 கோடி மதிப்பிலான 101 டன் உயிர் காக்கும் மருந்து பொருட்கள் அடங்கிய தொகுப்பு ரூபாய் 196.83 கோடி மொத்த மதிப்பில் 3 கட்டங்களாக தமிழ்நாடு அரசின் சார்பில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## 6. தாயகம் திரும்பியோர்

இந்திய வம்சாவழியைச் சேர்ந்த 4,61,639 நபர்கள் இலங்கையிலிருந்தும், 1,44,445 நபர்கள் பர்மாவிலிருந்தும், 2,055 நபர்கள் வியட்நாமிலிருந்தும் இந்தியாவிற்கு திரும்பியுள்ளனர். தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட இத்தமிழர்களின் நலன் பேணவும், வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் தனியாக

இத்துறை உருவாக்கப்பட்டது. இவர்களில், பெரும்பான்மையினர் தமிழ்நாட்டிலும், கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரபிரதேச மாநிலங்களிலும் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு தமிழ்நாடு அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

## 6.1. ரெப்கோ வங்கி

இலங்கை, பர்மா, வியட்நாம் மற்றும் பிற நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய மக்களின் மறுவாழ்விற்காக ரெப்கோ வங்கி 1969–ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் நிறுவப்பட்டது. தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி, சென்னை, சுருக்கமாக ரெப்கோ வங்கி என அழைக்கப்படுகிறது. ரெப்கோ வங்கி ஒன்றிய அரசு மற்றும் தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், தெலுங்கானா, கேரளா மற்றும் கர்நாடகா ஆகிய 5 மாநில அரசுகளின் பங்கு முதலீடு கொண்டு இயங்கி வருகிறது. இந்த வங்கி 1961–ஆம் ஆண்டின் மெட்ராஸ் கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் (தற்போது, 1983–ஆம் ஆண்டு

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம்) பதிவு செய்யப்பட்டுள்ளது. வங்கியின் நடவடிக்கை 19.11.1969 முதல் தொடங்கப்பட்டது. பல மாநில கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1984 மற்றும் 2002 அமலுக்கு வந்தது முதல், இந்த வங்கி மேற்படிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படுகிறது. தற்பொழுது இந்த வங்கி பல மாநில கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 2002–இன் கீழ் செயல்பட்டு வருகிறது. இந்த வங்கி ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் FFR பிரிவின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.

தற்பொழுது ரெப்கோ வங்கிக்கு, தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் 108 கிளைகள் உள்ளன. இந்த வங்கியின் தலைமையிடம் சென்னையில் உள்ளது.

31.03.2023 அன்று வங்கியின் மூலதனத்தின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ. எண் | முதலீட்டாளர்கள் | மூலதன தொகை (இலட்சங்களில்) | சதவீதம் % |
|---|---|---|---|
| 1. | ஒன்றிய அரசு | 7,632.00 | 50.07 |
| 2. | தமிழக அரசு | 713.00 | 4.68 |
| 3. | ஆந்திர பிரதேச அரசு | 104.77 | 0.69 |
| 4. | தெலுங்கானா அரசு | 74.88 | 0.49 |
| 5. | கேரள அரசு | 61.16 | 0.40 |
| 6. | கர்நாடக அரசு | 17.47 | 0.11 |
| 7. | தனி நபர்கள் | 6,639.60 | 43.56 |
| | மொத்தம் | 15,242.88 | 100.00 |

ஆரம்பகால கட்டத்தில், தாயகம் திரும்பியோர் தேயிலை, சின்கோனா மற்றும் ரப்பர் தோட்டங்களில் மறுவாழ்விற்காக குடியேற்றப்பட்டனர். அவர்களுக்கு நூற்பாலைகள் மற்றும் தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பிற்கான பல திட்டங்களை இந்த வங்கியின் துணை கொண்டு தமிழ்நாடு அரசு செயல்படுத்தி உள்ளது.

### 6.1.1. 2022–2023–ஆம் நிதியாண்டிற்கான ரெப்கோ வங்கியின் செயல்பாடுகள்

- வங்கியின் வர்த்தகம் 8% வளர்ச்சி கண்டு ரூபாய் 17,746 கோடியை எட்டியுள்ளது.
- வங்கியின் நிகர லாபம் சுமார் 15% வளர்ச்சி பெற்று ரூபாய் 70 கோடியாக உள்ளது.
- தாயகம் திரும்பிய பயனாளிகளின் எண்ணிக்கை இந்த வருடம் 45,000 ஆக உயர்ந்துள்ளது.
- தாயகம் திரும்பிய பட்டதாரி இளைஞர்கள் 30 பேருக்கு வங்கியில் பயிற்சி முறையில் Graduate Apprentice என்ற திட்டத்தின் கீழ் நியமன ஆணை வழங்கப்பட உள்ளது.

### 6.1.2. 2023–2024–ஆம் நிதியாண்டுக்கான ரெப்கோ வங்கி குறித்த கண்ணோட்டம்

- வங்கியின் வர்த்தகம் 9% வளர்ச்சி வீதத்தில் ரூபாய் 19,000 கோடியை எட்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

- வங்கியின் நிகர லாபம் 14% வளர்ச்சியோடு ரூபாய் 80 கோடியாக எதிர்ப்பார்க்கப்படுகிறது.

- தாயகம் திரும்பிய பயனாளிகளின் எண்ணிக்கை இந்த வருடம் 52,000 ஆக உயர்த்த வேண்டும் என திட்டமிடப்பட்டிருக்கிறது.

### 6.1.3. தாயகம் திரும்பியோர் அறக்கட்டளை

கடந்த இரண்டு ஆண்டுகளில் தாயகம் திரும்பியோர் அறக்கட்டளையின் மூலமாக செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு:

| வ. எண் | வருடம் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 2021−2022 | 907.00 |
| 2. | 2022−2023 | 780.50 |

## 7. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் 1978–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு நிறுவனமாக தொடங்கப்பட்டு வெளிநாட்டு வேலைநாடுநர்களை வெளிநாடுகளில் பணியமர்த்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம், இந்திய கம்பெனிகள் சட்டம், 1956–ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் இந்திய குடிபெயர்வோர் சட்டம் 1983–இன் கீழ் ஆட்சேர்ப்பு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு, வெளிநாட்டு வேலைகளில் பணியாளர்களைப் பணியமர்த்துவதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் உரிமம் பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் 15 இலட்சம் மற்றும் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூபாய் 50 இலட்சம் ஆகும்.

## 7.1. செயல்பாடுகள்

- வெளிநாட்டு வேலைநாடுநர்களுக்கு விழிப்புணர்வு மற்றும் பதிவு முகாம்கள் நடத்துதல்.
- வெளிநாட்டு வேலையளிப்பவர் சார்பாக நேர்காணல் ஏற்பாடு செய்து இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ள வெளிநாட்டு வேலைநாடுநர்களை நேர்காணல் மற்றும் தேர்வு செய்வதற்கு கலந்து கொள்ளச் செய்தல்.
- வெளிநாட்டு வேலைக்குத் தேர்வு செய்யப்பட்டோருக்கு சான்றிதழ் சான்றொப்பம் மற்றும் விசா பெறுவதற்கு உதவி புரிதல்.
- ECR நாடுகளுக்கான ECR கடவுச்சீட்டுகளுக்கு சென்னையில் உள்ள குடிபெயர்வோர் பாதுகாப்பு அலுவலகம் மூலம் குடியேற்ற அனுமதியைப் பெற்றுத் தருதல்.

- தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களுக்கு வெளிநாடு செல்வதற்கு தேவையான பயண ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல்.

## 7.2. பதிவு

வெளிநாட்டு வேலைநாடுநர்கள் வெளிநாட்டு வேலை வேண்டி பதிவு செய்வதற்கேதுவாக URL: https: //www.omcmanpower.com என்ற வலைதளம் இந்நிறுவனத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. 31.03.2023 அன்றமைந்தவாறு 5,397 நபர்கள் வெளிநாட்டு வேலை வேண்டி தங்களது பெயரைப் பதிவு செய்துள்ளனர்.

## 7.3. பணியமர்த்தல்

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட 1978–ஆம் ஆண்டு முதல் இதுநாள்வரை 10,849 நபர்களை வெளிநாட்டு வேலைகளில் பணியமர்த்தியுள்ளது. இந்நிறுவனம் 2022–2023–ஆம் நிதியாண்டில் 31.03.2023 அன்றமைந்தவாறு 310 நபர்களை சவுதி

அரேபியா, குவைத் மற்றும் ஓமன் ஆகிய நாடுகளில் பணியமர்த்தியுள்ளது.

## 7.4. வருவாய்

2022–2023–ஆம் நிதியாண்டில் 31.03.2023 வரையிலான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் தணிக்கைக்கு முந்தைய வருவாய் ரூபாய் 1.33 கோடியாகவும் மற்றும் தணிக்கைக்கு முந்தைய இலாபம் ரூபாய் 11 இலட்சமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

## 7.5. புதிய முயற்சிகள்

- அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து, 15 செவிலியர் கல்லூரிகளில் இறுதியாண்டு படித்த செவிலிய மாணவர் 481 பேருக்கு (Occupational English Test)

தொழில்சார்ந்த ஆங்கில தேர்வு பயிற்சியினை வழங்கியுள்ளது.

- இந்நிறுவன இணையதளத்தில், சேவைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கான வழிமுறைகள் (Payment Gateway) உருவாக்கப்பட்டுள்ளது.

## 8. முடிவுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அயலகத் தமிழர்கள் நலன் மற்றும் முகாம்வாழ் இலங்கைத் தமிழரின் நலன்களுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள். இத்திட்டங்கள் அயலகத்தமிழர் நலனுக்காகவும், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்காகவும் பொது மற்றும் மறுவாழ்வுத் துறையால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிகு தலைமையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மறுவாழ்வு முகாம்களில், இலங்கைத் தமிழர்கள் கௌரவமான, பாதுகாப்பான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதை உறுதி செய்யும் விதமாக தமிழ்நாட்டில் அவர்களுக்குப் போதுமான இருப்பிட வசதி, குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுடைய கல்வி மற்றும் வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், கல்வி, வேலைவாய்ப்பு, வணிகம் மற்றும் வியாபாரம் காரணமாக அயல்நாடுகளுக்குச் சென்றுள்ள அயலகத் தமிழர்கள் நலன் காத்திடவும், தமிழ் மொழியின் தொன்மை, வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு மற்றும் கலாச்சாரத்தின் பெருமைகளை நிலைப்படுத்துவதுடன், அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்லும் பணிகளுக்காகவும் அயலகத் தமிழர் நலவாரியம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு அயலகத் தமிழர் மற்றும் இலங்கை தமிழர் நலன் காக்கும் பொருட்டு இந்த அரசு அக்கறையுடன் முனைப்போடு செயல்பட்டு வருகிறது.

**செஞ்சி கே.எஸ். மஸ்தான்,**
**சிறுபான்மையினர் நலன்**
**மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்**
**நலத்துறை அமைச்சர்.**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.